**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.2**

**<u>OS.NO.113/2019</u>**

**Name** : பிரேமா

**Husband Name** : பழனி

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of** 6.8.2024.

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். பிரதிவாதி ஆஜர்.

<u>குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கை தாக்கல் செய்தது என் கணவர் தான். பாகப்பிரிவினை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். முதல் மற்றும் 2 வது பிரதிவாதி என் கணவரின் சகோதரர்கள். இந்த வழக்கு சொத்து எனக்கு தனிப்பட்ட முறையில் சொந்தமானது அல்ல என் கணவருக்கு சொந்தமானது. இந்த வழக்கில் என் கணவரை முதல் சாட்சியாக விசாரித்தனர். என் கணவரை விசாரணை செய்த போது நானும் நீதிமன்றம் வந்திருக்கிறேன் அவர் என்ன சாட்சியம் அளித்தார் என்று கேட்டுக்கொண்டிருந்தேன். என் கணவர் சாட்சியம் அளிக்கும்போது என்னுடன் எனது பெரிய அக்கா ஜெயகாந்தா வந்திருந்தார். அவரும் என் கணவர் என்ன சாட்சியம் அளித்தார் என்று கேட்டுக்கொண்டிருந்தார்.

இந்த வழக்கில் என் கணவர் சாட்சியம் அளித்த பிறகு என் சாட்சியம் தேவையற்றது என்றாலும், ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. என் கணவர் நீதிமன்ற விசாரணையில் ஒத்துக்கொண்ட சில சாட்சியங்கள் மறுதளிப்பதற்காக நான் சாட்சியாக விசாரிக்கப்படுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் ஒருதரப்பினராக என் கணவர் அளித்த சாட்சியத்திற்கு நேர் மாறாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அது ஏற்றுத்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் முதல் விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளும் தவறானவை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.